**கவனிக்க.**- *2016.08.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1980 - 2016 අගෝස්තු මස 12 වැනි සිකුරාදා - 2016.08.12

*1980 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | *1374* | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- நிதி முகாமைத்துவம் (பொறுப்பு) (திருத்தம்) சட்டமூலம் 2016, மே மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2016, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## யட்டிநுவர பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டம்*

**திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள்**

*(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆம் உபபிரிவின் கீழும் 2016, சனவரி மாதம் 4 ஆந் திகதி கொண்ட 627 ஆவது தீர்மான இலக்கத்தின் கீழ் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

செயலாளர்,
யட்டிநுவர பிரதேச சபை.

*2016, யூலை 22.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2013.06.28 ஆந் திகதிய 1816/42 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டதுமான திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமை பற்றிய துணைவிதிகள், இந்தத் தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து யட்டிநுவர பிரதேச சபயின் நிருவாக எல்லைக்குள் செயற்படுத்தப்படுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*8-241*

---

## மஹரகம நகர சபை

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்

*நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.*

*03. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.*

செயலாளர் அல்லது சபையின்
கருமங்களுக்கான பொறுப்பாளர்,
மஹரகம நகரசபை.

*2016, யூலை 25.*

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | திட்டமிடல் இலக்கமும் திகதியும் | வீதியின் பெயர் | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | அட்டவணையின் படி எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | திட்டமிடல் இலக்கம் : 922/3<br>திகதி : 1988.02.15 | தலவத்துகொடை வீதி வ. ப. இல. 174/36 தொடக்கம் 174/40 வரையான குறுக்கு வீதி | 329 மீ. | 15 அடி | வடக்கில் : 15 அடி குறுக்கு வீதி<br>தெற்கில் : இல. 5 காணித்துண்டு<br>கிழக்கில் : -<br>மேற்கில் : காணித்துண்டு இலக்கங்கள் 1, 2, 3, 4 |

8-243

## தெவுந்தறை பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 09 (3) ஆம் பிரிவின் மற்றும் (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் தெவுந்துறை பிரதேச சபையின் செயலாளரான எஸ். டபிள்யூ. ஏ. கருணாசிறி ஆகிய எனக்கு கிடைக்கப்பெற்ற அதிகாரத்தின் பிரகாரம் தெவுந்தறை பிரதேச சபையின் தலைவர் சுஜீவ வெதகே அவர்களினால் விதிக்கப்பட்ட இலக்கம் 1912 மற்றும் 2015.04.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிகக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துணைவிதியை 2016, மார்ச் மாதம் 10 ஆந் திகதி நிதி மற்றும் கொள்கைக் குழுவின் தீர்மான இலக்கம் 3:4 மற்றும் தீர்மான புத்தக இலக்கம் 78 இன் கீழ் இரத்துச் செய்யப்பட்டதாக அறிவித்தல் விடுக்கின்றேன்.

எஸ். டபி.ஏ. கருணாசிறி,
செயலாளர்,
தெவுந்தறை பிரதேச சபை.

8-313/1

## தெவுந்தறை பிரதேச சபை

(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் பிரிவின் கீழ் தெவுந்தறை பிரதேச சபையின் செயலாளர் எஸ். டபிள்யூ. ஏ. கருணாசிறி ஆகிய எனக்கு கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் 2016, மாச்சு 10 ஆந் திகதி கீழே அட்டவணையில் குறித்த நிதி மற்றும் கொள்கைக் குழுவின் தீர்மான இலக்கம் 3.5 மற்றும் தீர்மான புத்தகத்தின் தீர்மான இலக்கம் 78 இன் கீழ் தீர்மானித்ததாக பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

எஸ். டபி.ஏ. கருணாசிறி,
செயலாளர்,
தெவுந்தறை பிரதேச சபை.

பிரதேச அலுவலகம்,
தெவுந்துறை,
2016, மாச்சு 10.

**அட்டவணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவின்படி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்படி, தென் மாகாண சபை உள்ளூராட்சி நிர்மாணத்துறை பொறுப்பமைச்சரால் ஆக்கப்பட்டதும், 520/7 ஆம் இலக்கம் கொண்ட 1988.08.23 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 1989 ஆம் அண்டின் 12 அம் இலக்க உள்ளூராட்சி (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 (iii) ஆம் பிரிவின் படி தென் மாகாண சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 648 ஆம் இலக்கம் மற்றும் 1991.02.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளில் 7, 9, 10, 12, 13, 17, 18, 24, 25, 26, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 39, 41, 42 ஆகிய துணை விதிகளை அவ்விதமே ஏற்றுக்கொண்டு இலக்கம் 21 அருவருக்கத்தக்க ஆபத்தான வியாபாரம் துணைவிதியின் அட்டவணையில் குறித்த கீழே அட்டவணையில் ii இல் உட்படுத்தப்பட்ட வியாபாரங்கள் தொடர்பாக உட்படுத்திக் கொள்ள 2013.05.17 ஆந் திகதிய 1811 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகளின் ix, xxiv, xxvii ஆகிய இலக்கத்தைத் தவிர i தொடக்கம் xxix வரையான ஏனைய

துணை விதிகளை தெவுந்துறை பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் வரத்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் ஏற்றுக்கொண்டு செயற்படுத்தப்பட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆம் பிரிவின் கீழ் கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் நிதி மற்றும் கொள்கைக் குழுவின் தீர்மான இலக்கம் 3.5 மற்றும் தீர்மான புத்தக இலக்கம் 78 இன் கீழ் தெவுந்துறை பிரதேச சபையின் செயலாளரான எஸ். டபிள்யூ. ஏ. கருணாசிறி ஆகிய என்னால் தீர்மானித்ததாக இத்தால் மூலம் அறியத்தருகின்றேன்.

## அட்டவணை II

1. மீன் விற்கும் நிலையம் நடத்தல்.
2. இறைச்சி விற்கும் நிலையம் நடத்தல்.
3. குளிர்பான கைத்தொழிலகம் நடத்தல்.
4. சிகை அலங்காரம் நிலையம் நடத்தல் பாபர் சாப்பு, சலூன் நிலையம் நடத்தல்.
5. பேக்கரி நடத்தல்.
6. பால் பட்டி நடத்தல்.
7. நீச்சல் தடாகம் நடத்தல்.
8. ஐஸ் கைத்தொழிலகம் நடத்தல்.
9. சாப்பாட்டுக்கடை சிற்றுண்டிச்சாலை நடத்தல்.
10. ஹோட்டல் நடத்தல்.
11. தங்குமிட வசதி கொண்ட நிலையம் நடத்தல்.
12. சலவையகம் நடத்தல்.
13. கைத்தொழிலகம் நடத்தல்.
14. மரணச் சடங்கு சேவை நிலையம் நடத்தல்.
15. உல்லாச வியாபாரிகளினால் உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
16. அமைப்புப் பொருட்கள் கைத்தொழில் நிலையம் மற்றும் அமைப்புப் பொருட்கள் களஞ்சியம் நடத்தல்.
17. இயந்திரத்தின் மூலம் கல் உடைக்கும் நிலையம் நடத்தல்.
18. உரம் உற்பத்தி.
19. உரக் களஞ்சியம் நடத்தல்.
20. மாசி 5 அந்தருக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்.
21. கோழிப்பண்ணை நடத்தல்.
22. செங்கல் உடைக்கும் மற்றும் கபொக் கல் உடைக்கும் நிலையம் நடத்தல்.
23. குதிரை மற்றும் எருமை பந்தயம் மற்றும் பண்ணை நடத்தல்.
24. மிருகப் பண்ணை நடத்தல்.
25. இறப்பர் தயாரிக்கும் நிலையம் நடத்தல்.
26. பசளைச் சுண்ணாம்பு மற்றும் மிஹிரன் போடும் உறைகளை களஞ்சியப்படுத்தல், சுத்தப்படுத்தல், தூசி அகற்றல்.
27. கருங்கல் உடைக்கும் கற்குழி நடத்தும் நிலையம் நடத்தல்.
28. செம்மறி ஆடு, ஆடு இருவகைகளினதும் 10க்கு மேல் பண்ணை நடத்துதல்.
29. ஓடு, கொங்கிரீட் பயிப் மற்றும் வேறு கொங்கிரீட் பொருள் உற்பத்தி நடத்தல்.
30. உப்பு களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
31. பம்பாய் வெங்காயம் 5 அந்தருக்கு அதிகமாக களஞ்சியப் படுத்தல்.
32. உருளைக்கிழங்கு வெங்காயம் 5 அந்தருக்கு கூடுதலாக களஞ்சியப்படுத்தல்.
33. சிரட்டைக் கரி அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தல்.
34. பழைய உலோகம் களஞ்சியப்படுத்தல்.
35. சீமெந்து 25 அந்தருக்கு கூடுதலாக களஞ்சியப்படுத்தல்.
36. கருவாடு 10 அந்தருக்கு கூடுதலாக களஞ்சியப்படுத்தல்.
37. உப்பிட்ட மீன் 10 அந்தருக்கு கூடுதலாக களஞ்சியப் படுத்தல்.
38. கோழி இறைச்சி விற்கும் நிலையம் நடத்தல்.
39. ஒட்டுப் பசை வகைகள் உற்பத்தி செய்தல்.
40. பற்றரி நிரப்பும் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
41. டயர் மீளளிப்புச் செய்யும் மற்றும் கட்டை வெட்டும் நிலையம் நடத்தல்.
42. டயர் டியூப் வோல்கனைஸ் பண்ணும் நிலையம் நடத்தல்.
43. மரணச் சடங்குப் பெட்டி தயாரிக்கும் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
44. வீட்டுத் தளபாடங்கள் தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நிலையம் நடத்தல்.
45. பிரம்புப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நிலையம் நடத்தல்.
46. கொங்கிரீட் மற்றும் மட்பாண்டம் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
47. இயந்திர சக்தி கொண்ட புடவைக் கைத்தொழிலகம் நடத்தல்.
48. மா மற்றும் சரக்குப் பொருள் அரைத்தல்.
49. பிண்ணாக்கு மற்றும் மிருக உணவு 20 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தல்.
50. மிருக உணவு தவிர வேறு தானியம் வகைகள் 10 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தல் கூட்டுறவுச் சங்கங்களினால் களஞ்சியப்படுத்தும் தானிய வகைகள் இதன் கீழ் உரித்தாகும்.
51. இறப்பர் உற்பத்திப் பொருள்.
52. மோர் வரல் தயாரிப்பதற்கு களஞ்சியப்படுத்தல்.
53. பொலிதீன் செயூலொயிட் மற்றும் பர்ஸ் பெக்ஸ் உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தல்.
54. அசிட் 5 கலனுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்.
55. பூட் சப்பாத்து மற்றும் பாதணிகள் உற்பத்தி.
56. மெழுகுவர்த்தி உற்பத்தி.
57. நீராவி, நீர் உபயோகித்த இயந்திர சக்தியால் மரம் கிழித்தல்.
58. கொப்பரா காய்ச்சுதல்.
59. இயந்திரம் மூலம் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல்.
60. இயந்திரம் மூலம் எண்ணெய் வகைகள் உற்பத்தி செய்தல்.
61. எண்ணெய் வடித்தல் செக்கு மற்றும் கை ஆலை நடத்தல்.
62. நார் உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தல், நார் உற்பத்தியும் களஞ்சியப்படுத்தலும்.
63. தீப்பெட்டி உற்பத்தி.
64. இயந்திர தும்பு ஆலை நடத்தல்.
65. தேங்காய் எண்ணெய் 50 கலனுக்கு மேல் களஞ்சியப்படுத்தல்.
66. ஓடுகள் 500 இற்கு மேல் களஞ்சியப்படுத்தும் திறந்த வெளி அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
67. செங்கல் 250 க்கு மேல் களஞ்சியப்படுத்தும் திறந்த வெளி அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.

68. கபொக் கல் 250 க்கு மேல் களஞ்சியப்படுத்தும் திறந்த வெளி அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
69. இயந்திர தச்சுத் தொழில் நடத்தல்.
70. பீடி உற்பத்தி.
71. சாயம் மற்றும் வார்னிஸ் 5 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
72. மரப்பெட்டி 5 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
73. தும்பு உற்பத்தி.
74. பசளை சுண்ணாம்பு மற்றும் மிஹிரன் இடப்பட்ட சாக்குகள் 100 க்கு மேல் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
75. பாவிக்கப்பட்ட இறப்பர் மற்றும் டயர் டியூப் 150க்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
76. இனிப்புப் பண்ட உற்பத்தி.
77. சிரட்டைக்கரி ஒரு அந்தருக்கு மேல் களஞ்சியப் படுத்தல்.
78. படகு அல்லது பார் அமைத்தல்.
79. ஒக்ஸிஜன் அல்லது வேல்டின் வேலை நடத்தல், மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல், கராஜ் அல்லாத நிலையம் நடத்தல்.
80. மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் நிலையம் நடத்தல்.
81. இயந்திரம் மூலம் அச்சகமொன்று நடத்தல்.
82. கையால் மற்றும் பாதத்தால் செயற்படுத்தப்படும் அச்சகமொன்று நடத்தல்.
83. தேங்காய் அல்லாத வேறு எந்த வகையிலுமான தேங்காய் எண்ணெய் லீற்றர் 54.5 மேல் களஞ்சியப்படுத்தும் களஞ்சியம் நடத்தல்.
84. சாயம் மற்றும் வார்னிஸ் உற்பத்தி.
85. தும்பு மற்றும் பஞ்சு மெத்தை மற்றும் தலையணி மற்றும் குசன் உற்பத்தி நிலையம் அல்லது களஞ்சியம் நடத்தல்.
86. புதிய டயர் மற்றும் டியூப் 150 க்கு மேல் களஞ்சியப்படுத்தல்.
87. பாவிக்கப்பட்ட காகிதம் 250 கிலோவுக்கு மேல் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
88. ஸ்பிரே பெய்ன்ட் வேலை நடத்தும் நிலையம்.
89. இயந்திர குளிரூட்டி தொடர்பாக நிறுவனம் நடத்தல்.
90. இயந்திர வலுவால் துணி தைக்கும் நிலையம் நடத்தல்.
91. சேட் கொலர் மற்றும் சேட் கை சுருக்கிடும் நிலையம் நடத்தல்.
92. ரைய்க்கிலீன் செய்யும் நிறுவனம் நடத்தல்.
93. இயந்திர வலு பாவித்து இலெக்ரோ பிலேடிங் வேலை க்குரோமியம் பூசுதல், தங்கம் பூசுதல், ள்ளி பூசுதல், செம்பு பூசுதல் நிலையம் நடத்தல்.
94. இயந்திர வலு பாவித்து இலெக்ரோ பிலேடிங் பேன்ட் கராஜ் நடத்தல்.
95. துப்பரவற்ற உலோகம் உருக்கும் நிலையம் நடத்தல்.
96. தீக்களியாட்ட பொருட்கள் களஞ்சியப்படுத்தல்.
97. 2 கிலோ கிராமுக்கு மேற்பட்ட வெடி மருந்துகள் களஞ்சியப்படுத்தல்.
98. நிலம் ஒப்பமிடும் பொலிஷ் உற்பத்தி.
99. குளிரூட்டி பழுதுபார்த்தல், ரீகண்டிசன் நடத்தல், பரீட்சித்தல் தொடர்பாக நிறுவனம் நடத்தல்.
100. மோட்டார் வாகனங்கள் பொருத்தும் நிறுவனம் நடத்தல்.
101. ஸ்கூடர்கள் மோட்டார் வாகனங்கள் பொருத்தும் நிலையம் நடத்தல்.
102. வெடி பொருள் இரசாயன பொருள் மற்றும் பசளை விற்பனை நிறுவனம் நடத்தல்.
103. அரிசி ஆலை நடத்தல்.
104. மர ஆலை நடத்தல்.

8-313/2

---

## தெவுந்தறை பிரதேச சபை

## 2016 ஆம் வருடத்திற்கான விளம்பரங்களுக்கான அறிவித்தல்/கட்புலனாகும் சூழல் வரி தொடர்பான துணைவிதி

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் படி தெவுந்தறை பிரதேச சபையின் செயலாளர் எஸ். டபிள்யூ. ஏ. கருணாசிறி ஆகிய எனக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் தெவுந்துறைப் பிரதேச சபையின் வலுப் பிரதேசத்திற்குள் விளம்பரப்படுத்தப்பட்ட கீழே அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்த அறிவித்தல் பலகை / பெனர் என்பவற்றுக்காக அட்டவணையின் II ஆம் நிரலின் படி வருடாந்த வரியை 2016 ஆம் வருடத்திற்காக அறவிடப்படவென 2016.03.10 ஆந் திகதி நிதி மற்றும் கொள்கைக் குழுவின் இலக்கம் 3.5 இன் தீர்மான புத்தக இலக்கம் 78 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டன.

எஸ். டபி.ஏ. கருணாசிறி,
செயலாளர்,
தெவுந்தறை பிரதேச சபை.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II<br>ரூபா ச. |
|---|---|
| 1. நிரந்தர விளம்பரப் பலகை ஒன்றுக்காக சதுர அடிக்கு | 75 0 |
| 2. பெனர் ஒன்றுக்காக சதுர அடிக்கு | 25 0 |

8-313/3

## தெவுந்தறை பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக விளம்பரப்படுத்தல்

*தெவுந்தறைப் பிரதேச சபை வலுப் பிரதேசத்திற்குள் கீழே அட்டவணையின் இலக்கம் 1 இல் காட்டப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவில் உள்ளடங்கிய பிரதேசங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக விளம்பரப்படுத்துவதற்காக 2015.10.08 ஆந் திகதிய நிதி மற்றும் கொள்கைகள் குழுவின் சிபாரிசுக்கு ஏற்ப 2015.10.08 ஆந் திகதிய தீர்மான இலக்க புத்தகத்தின் பக்கம் 40 இல் குறித்த இலக்கம் 3.12 தீர்மானத்தின் படி அட்டவணை 1 இல் குறித்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்த பிரதேசங்களாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகளினால் உள்ளடங்கிய பிரதேசங்களை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவிற்கு ஏற்ப பொது மக்களுக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.*

எஸ். டபி.ஏ. கருணாசிறி,
செயலாளர்,
தெவுந்தறை பிரதேச சபை.

*2016, யூலை 20.*

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | கிராம அலுவலர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் |
|---|---|---|
| 1. | தெவுந்தறை வடக்கு | 432 |
| 2. | தெவுந்தறை மத்திய | 432 A |
| 3. | வாவ்வ | 433 E |
| 4. | கபுகம மேற்கு | 435 |
| 5. | கந்தராவத்த தெற்கு | 435 A |
| 6. | கபுகம கிழக்கு | 436 |
| 7. | கபுகம வடக்கு | 436 B |
| 8. | கபுகம மத்திய | 436 C |
| 9. | கந்தறை மேற்கு | 437 |
| 10. | கந்தறை கிழக்கு | 437 A |
| 11. | கந்தறை தெற்கு | 437 B |
| 12. | கந்தறை மத்திய | 437 C |
| 13. | தலல்ல தெற்கு | 438 |
| 14. | தலல்ல மத்திய | 438 A |
| 15. | தலல்ல | 438 C |
| 16. | நாஔடுன்ன தெற்கு | 442 B |

*8-314*

---

## தெவுந்தறை பிரதேச சபை

*தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் தெவுந்தறை பிரதேச செயலகப் பிரிவின் தெவுந்தறை கிராமத்தின் பதரம்ப தோட்டத்தில் அமைந்துள்ள தெவுந்தறை பொது மையவாடி மற்றும் தகன அறையை தெவுந்தறை பிரதேச சபைக்குரிய பொது மையவாடியாகவும் மற்றும் தகன அறையாகவும் ஏற்றுக் கொண்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக தீர்மான புத்தகத்தின் தீர்மான இலக்கமான 77 ஆக தீர்மானித்துள்ளது.*

தெவுந்தறை பொது மையவாடி மற்றும் தகன அறையின் எல்லைகள் :

* விஸ்தீரணம் ஹெக்டயார் 0.5411 (1ஏ. 1றூ. 14பே.)

* தென் மாகாணம் மாத்தறை மாவட்டத்தின் தெவுந்தறை கிராமத்தில் அமைந்துள்ளதும் பதரம்ப என அழைக்கப்படும் தெவுந்தறை பொது மையவாடி மற்றும் தகன அறைக்கான காணி பொக்குனு கன்டிய வத்த வரிமதிப்பு, வரிமதிப்பு

இலக்கம் 62/12 முதியன்சேகேவத்த மற்றும் உஸ்வத்த, வரிமதிப்பு இலக்கம் 66/1 பதரம்ப வத்த மற்றும் மீனவ கப்பற்துறை வீதிகள் எல்லைகளாகும்.

எஸ். டபி.ஏ. கருணாசிறி,
செயலாளர்,
தெவுந்தறை பிரதேச சபை.

8-315

---

### தவலம பிரதேச சபை

துணை விதிகளை ஏற்றுக்கொள்ளல்

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) பிரிவின் கீழ் தவலம பிரதேச சபை செயலாளராக எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2016.05.18 ஆந் திகதி தீர்மான இலக்கம் 122 கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் என்னால் எடுக்கப்பட்டதென மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

*அதன் படி திண்ம கழிவுபொருட்கள் முகாமைத்துவம் சம்பந்தமாக துணைச் சட்டம் மற்றும் நுளம்புகளையும், நோய் கிருமிகளையும் இல்லாதொழித்தல் சம்பந்தமான அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி 2016.06.01 ஆந் திகதியிலிருந்து ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்காக தீர்மானம் செய்யப்பட்டதென, மென்மேலும் அறியத்தருகின்றேன்.*

டபிள்யூ. ஏ. கே. சந்தன,
செயலாளர்,
தவலம பிரதேச சபை.

2016, யூன் 20.

#### தீர்மானம்

*தென் மாகாண உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் ஆக்கப்பட்ட சட்டம் துணைச்சட்டம் 2013.10.25 ஆந் திகதிய 1834 ஆம் இலக்க வர்தத்மானப் பத்திரிகையில் IV(அ) பகுதியில் மாகாண சபையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட போதிலும் அந்த சட்டம் துணைச்சட்டம் 2014.08.12 ஆந் திகதிய தென் மாகாண சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. உள்ளூராட்சித் தாபனம் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதி) சட்டத்தின் 2 (3) ஆம் பிரிவு மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் படி மாகாண சபை அவ்வாறு நிரந்தரம் செய்யப்பட்டதாக 2014.10.17 ஆந் திகதிய 1884/61 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் IV(அ) பகுதியில் பிரதேச சபைக்குரிய பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்ற திண்ம கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் சம்பந்தமாக துணைச் சட்டம் மற்றும் நுளம்புகளையும், நோய் கிருமிகளையும் இல்லாதொழித்தல் சம்பந்தமான துணைவிதி 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனம் (அங்கீகாரம் பெற்ற துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் படி பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2016.06.01 ஆந் திகதியிருந்து ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு தவலம பிரதேச சபையின் செயலாளர் டபிள்யூ. ஏ. கே. சந்தன என்ற என்னால் தீர்மானம் செய்யப்பட்டன.*

8-330

---

### தவலம பிரதேச சபை

அங்கீகாரம் பெற்ற துணை விதிகளை ஏற்றுக்கொள்ளல்

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) பிரிவின் கீழ் தவலம பிரதேச சபை செயலாளராக எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2016.06.02 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 143 கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் என்னால் எடுக்கப்பட்டதென மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

*அதன் படி இதன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்ட பொது அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள் எல்லாம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து தவலம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் செயல்படவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டதென மென்மேலும் அறியத்தருகின்றேன்.*

டபிள்யூ. ஏ. கே. சந்தன,
செயலாளர்,
தவலம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
தவலம,
2016, யூன் 20.

#### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்திலும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனம் (அங்கீகாரம் பெற்ற துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) வது உப பிரிவின் (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனம் (அங்கீகாரம் பெற்ற துணை விதிகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி தென் மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி தென் மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் ஆக்கப்பட்ட 2013, மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை நாள் 1811 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் IV(அ) பகுதியில் அறிவிக்கப்பட்டதும், தென் மாகாண மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்டு 2014.08.29 ஆந் திகதி இலக்கம் 1878 உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியாரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் IV(அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும் துணை விதிகளில் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு துணை*

விதிகள் தவலம பிரதேச சபையால் ஏற்றுக்கொள்ளப்படவும், அதன் துணை விதிகள் இந்த அறிவித்தலை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு அறிவிக்கப்படும் திகதியிலிருந்து தவலம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் செயல்படவேண்டும் என்றும், தவலம பிரதேச சபையின் செயலாளர், டபிள்யூ. ஏ. கே. சந்தன என்ற என்னால் தீர்மானம் செய்யப்பட்டன.

**அட்டணை**

| | | |
|---|---|---|
| I. | பகுதி - | சகல அங்கீரிக்கப்பட்ட துணை விதிகளுக்கு உரிய பொருள் கோரல் சம்பந்தமான துணை விதி. |
| II. | பகுதி - | சகல அங்கீரிக்கப்பட்ட துணை விதிகளுக்கு உரிய பொது ஏற்பாடுகள் சம்பந்தமான துணை விதி. |
| III. | பகுதி - | ஏதாவது துணை விதியின் ஏற்பாடுகள் அல்லது விதி முறைகளை மீறியதன் தொடர்பான தண்டணை சம்பந்தமான துணை விதி. |
| IX. | பகுதி - | பால்மா சம்பந்தமான துணை விதி. |
| X. | பகுதி - | நீச்சல் குளம் சம்பந்தமான துணை விதி. |
| XVI. | பகுதி - | தொழிற்சலை சம்பந்தமான துணை விதி. |
| XVII. | பகுதி - | மரண சடங்குகளுக்கு சேவையளிக்கும் நிலையம் சம்பந்தமான துணை விதி. |
| XIX. | பகுதி - | பாதசாரி கடவை சம்பந்தமான துணை விதி. |
| XX. | பகுதி - | கட்டிடப்பொருட்கள் சம்பந்தமான தொழிற் சாலை மற்றும் கட்டிடப் பொருட்கள் களஞ்சியப் படுத்துதல் மேற் பார்வை மற்றும் நிர்வாகம் சம்பந்தமான துணை விதி. |
| XXII. | பகுதி - | வீதிகளை சேதப்படுத்தல் மற்றும் வீதிகளில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்வதை தடைசெய்வது சம்பந்தமான துணை விதி. |
| XXIII. | பகுதி - | பிணம் சுடும் இல்லத்தை (தகனஞ்செய்) ஒழுங்குசெய்தல் நிருவாகித்தல் மற்றும் கட்டணம் அறவிடல் சம்பந்தமான துணை விதி. |
| XXIV. | பகுதி - | சமுக சாலை சம்பந்தமான துணை விதி. |

8-331

**தவலம பிரதேச சபை**

மதிப்பீட்டு வரி விதித்தல் மற்றும் ஏக்கர் வரி செயல்களுக்காக தேவையான தவணை அறிக்கை

அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) பிரிவின் கீழ் தவலம பிரதேச சபை செயலாளராக எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2016.05.10 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 95 இன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் என்னால் எடுக்கப்பட்டதென மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

டபிள்யூ. ஏ. கே. சந்தன,
செயலாளர்,
தவலம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
தவலம,
2016, யூன் 20.

**தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் உடைய பிரதேச சபை சட்டத்தின் 139(1) உப பிரிவின் படி பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மதிப்பீட்டு வரி விதித்தல் மற்றும் ஏக்கர் வரி செயல்களுக்காக தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்ளுவதற்கு ஒரு வீடு, கட்டிடம் காணி அல்லது மடுவ உரிமையாளருக்கு மற்றும் வசிப்பவருக்கு தவணை அறிக்கை வழங்க வேண்டும் என தவலம பிரதேச சபையின் செயலாளர், டப்.ஏ.கே. சந்தன என்ற என்னால் தீர்மானம் செய்யப்பட்டது.

8-332

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.